## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.108/2017**

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 02.06.2023.

**Evidence Recorded Time: 1.11 P.M. to 1.25 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கோவிந்தராஜ் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | கிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**:-

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தன் பேரில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் தற்போதும் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.03.2017-ம் தேதி அதிகாலையில் TN 27 Z 7787 என்ற பதிவு எண் கொண்ட லாரியில் ஓட்டுநராக பணிபுரிந்த போது பதிவு எண் TN 52 U 7797 ஹோண்டா அமேஸ் என்ற காரை கவனக்குறைவாகவும் அதிவேகமாகவும் ஓட்டி வந்த மாரியப்பன் மகன் ஜெயக்குமார் என்பவர் நான் ஓட்டி வந்த லாரியின் சைடு ஓர வலது பக்க பின் டயரில் மோதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்திற்கு காரணம் காரை ஓட்டி வந்த ஓட்டுநர் ஜெயக்குமார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் பவானி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பவானி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 169/2017, 23.03.2017-ம் தேதியில் பவானி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் புலனாய்வு முடிக்கப்பட்டு ஹோண்டா அமேஸ் காரை ஓட்டி வந்த ஜெயக்குமார் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த குற்றப்பத்திரிக்கையின் படி பவானி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்பு மேற்படி ஜெயக்குமார் மேற்படி குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம்

செலுத்தியுள்ளார். விபத்திற்கு முழு காரணமும் ஜெயக்குமார்தான் ஆகும், நான் எந்த வகையிலும் காரணம் இல்லை. நான் கொடுத்த முதல் தகவல் அறிக்கை, என்னுடைய ஓட்டுநர் உரிமம் ஏற்கனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>5–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

விபத்து சமயத்தில் நான்தான் லாரியை ஓட்டிச் சென்றேன். கார் வலது புறமாக ஏறி வந்ததை குறிப்பிடுவதற்கு நான் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து ரோட்டின் மையப்பகுதியில் இரண்டு வண்டிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டது என்றால் சரிதான். விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் தேதி தற்போது நினைவில்லை. விபத்து அதிகாலை 3 அல்லது 3.30 மணியிருக்கும். நான் கொளத்தூரில் இருந்து லோடு ஏற்றிக்கொண்டு திருப்பூர் சென்று கொண்டிருந்தபோதுதான் விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த மறுநாள்தான் லாரியை சம்பவ இடத்தில் இருந்து எடுத்துச் சென்றேன். காரில் வந்து அடிபட்ட நபர்களை எந்த மருத்துவமனைக்கு, யார் அழைத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கும்போதும் பொதுபணி வில்லை வழங்கும் போதும் மோட்டார் வாகன ஆய்வாளர் எங்களுக்கு விபத்து நடந்த சமயத்தில் அடிபட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டும் என்றும், எங்கள் வாகனத்தில் உள்ள முதலுதவி பெட்டி மூலம் அவர்களுக்கு முதலுதவி செய்யவேண்டும் என்று அறிவுரை வழங்கினார் என்றால் சரிதான். ஆகவே விபத்து நடந்த பிறகு அடிபட்டவர்களை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று தெரியாது, நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். என்னுடைய தவறை மறைப்பதற்காக நான் அவசர அவசரமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றாலும் விபத்திற்கு நான்தான் காரணம் என்றாலும் சரியல்ல. கார் ஓட்டுநர் அபராதம் செலுத்தியது சம்மந்தமாக நான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அழைப்பாணையில் எவ்வாறு விபத்து நடைபெற்றது என்று கூறியுள்ளதை பார்த்து அதன் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்திற்கு முழு காரணமும் நான்தான் என்றாலும், என் பேரில் தவறு இல்லை

என்றால் நான் விபத்துநடந்த இடத்திலேயே இருந்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் கொளத்தூரில் இருந்து திருப்பூர் நோக்கி இடது புறமாக சென்று கொண்டிருந்தேன். காரும் இடது புறமாகத்தான் வந்து கொண்டிருந்தது. நான் தூக்க கலக்கத்தில் வண்டியை தவறாக ஓட்டி அதன் மூலம் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி காரின் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், அதனால் நானும், காரின் இன்சூரன்ஸ் நிறுவனமும் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.